இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, பயங்கரவாதத்தை ஒடுக்குவது பற்றிய சார்க் பிராந்திய சமவாயச் சட்டம்

---

*[1988, டிசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1988, டிசெம்பர் 23 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: சதம் 60 தபாற் செலவு: சதம் 75

**1988 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, பயங்கரவாதத்தை ஒடுக்குவது பற்றிய சார்க் பிராந்திய சமவாயச் சட்டம்**

[1988, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 3/88

**பயங்கரவாதத்தை ஒடுக்குவது பற்றிய பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கழகத்தின் பிராந்திய சமவாயத்தைப் பயனுறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் ; அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியேழாம் ஆண்டு நவம்பர் மாதம் நாலாம் நாளன்று காத்மண்டுவில் இலங்கை அரசாங்கத்தினதும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசியக் கழகத்தின் ஏனைய அங்கத்துவ நாடுகளினதும் சார்பாக, பயங்கரவாதத்தை ஒடுக்குவது தொடர்பான பிராந்திய சமவாயம் ஒன்று கையொப்பமிடப்பட்டு 1988 ஓகத்து 22 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாதலாலும், அது மேற்சொல்லப்பட்ட சமவாயத்தினது ஏற்பாடுகளுக்கிணங்க, உறுதிப்படுத்தல் சாதனங்கள் வைப்பிலிடப்படுவதன்மேல் வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதாதலாலும் ;

அத்துடன் மேற்சொல்லப்பட்ட சமவாயத்தினது ஏற்பாடுகளைப் பயனுறுத்துவதற்கு சட்ட ஏற்பாடு செய்வது அவசியமானதென்பதாதலாலும் ;

ஆகவே, இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 70 ஆம் இலக்க, பயங்கரவாதத்தை ஒடுக்குவது பற்றிய சார்க் பிராந்திய சமவாயச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**பாகம் I—1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்துக்கான திருத்தங்கள்**

*மீள ஒப்படைத்தற் சட்டத்துக்கான அட்டவணைக்கான திருத்தங்கள்.*

2. 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மீள ஒப்படைத்தற் சட்டத்துக்கான அட்டவணையானது, அதற்கான அட்டவணையின் முடிவில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது—

"பாகம் ஆ

(அ) 1970, திசெம்பர் 16 ஆம் தேதியன்று ஹெய்க்கில் கைச்சாத்திடப்பட்ட, வானூர்தியின், சட்டவிரோதக் கைப்பற்றலை ஒடுக்குதலுக்கான சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று ;

(ஆ) 1971, செப்ரெம்பர் மாதம் 23 ஆம் தேதியன்று மொன்றியலில் கைச்சாத்திடப்பட்ட, சிவில் விமானப்போக்குவரத்தினது பாதுகாப்புக்கெதிரான சட்டவிரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று ;

(இ) 1973, திசெம்பர் 14 ஆந் தேதியன்று நியூயோர்க்கில் கைச்சாத்திடப்பட்ட காவற்றாது முகவர்கள் உட்பட சர்வதேச ரீதியாக பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றங்களைத் தடுத்தலும் தண்டித்தலும் தொடர்பான சமவாயத்தினது நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று ;

(ஈ) எந்தச் சமவாயத்தில் சார்க் அங்கத்துவ நாடுகள் இணக்கவர்களாகவுள்ளனவோ அந்த ஏதேனும் சமவாயத்தினது அதனுடன் எந்தச் சமவாயம் வழக்குத் தொடர்வதற்கு அல்லது மீள ஒப்படைத்தல் வழங்குவதற்குத் திறத்தவரைக் கடப்பாடுடையவராக்குகின்றதோ அந்த ஏதேனும் சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று ;

(உ) கொலை, கொலைக்குற்றமாகாத கைமோசக்கொலை, உடல் ஊறு விளைவிக்கும் தாக்குதல், ஆட்கடத்தல், பணயமாக எடுத்தல் அத்துடன் ஆதனத்துக்குப் பாரிய சேதம் அல்லது ஆட்களுக்குப் பாரிய உடல்ஊறு அல்லது இறப்புடன் தொடர்புபட்ட வகைதொகையற்ற வன்முறையைத் தூண்டிவிடுவதற்கான வழிவகையாகப் பயன்படுத்தப்படும்போதான சுடுபடைக்கலன்கள், ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் அபாயகரமான பதார்த்தங்கள் தொடர்பிலான தவறுகள்.

பொருள்கோடல்.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தியேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அச்சட்டத்துக்கான அட்டவணையின் பாகம் ஆ விலும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, அச்சட்டத்தின் நோக்கத்துக்காக, இலங்கை அரசாங்கத்துக்கும் இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நாட்டுக்கும் இடையே, அத்தகைய ஏதேனும் தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனுமாளை மீள ஒப்படைக்கும் நோக்கங்களுக்காக மட்டும், அரசியல்தன்மைத்தான தவறொன்றாக, அல்லது அரசியல் தன்மையுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக, அல்லது அரசியல் தவறொன்றுடன் சம்பந்தப்பட்ட தவறொன்றாக, அல்லது அரசியற் காரணிகளால் ஊக்குவிக்கப்பட்ட தவறொன்றாக இல்லாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் II—மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடுகள் தொடர்பான ஏற்பாடு

*குறித்த சில சார்க் நாடுகளுடன் இப்போதுள்ள மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடுகள் அட்டவணையிலுள்ள தவறுகளுக்கு ஏற்பாடு செய்வதாகக் கருதப்படுதல்.*

4. இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் நாட்டுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு ஒன்று இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று வலுவிலிருக்கின்றவிடத்து, அத்தகைய ஒழுங்கேற்பாடானது, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மீள ஒப்படைத்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தவறுகள் தொடர்பில் மீள ஒப்படைப்புக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குவதற்கானதெனக் கருதப்படுதல் வேண்டும்.

5. இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்ட ஏதேனும் நாட்டுடன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மீள ஒப்படைத்தல் ஒழுங்கேற்பாடு எதுவும், இச்சட்டம் ஆரம்பமாகும் தேதியன்று வலுவிலில்லாதவிடத்து, அமைச்சர், கசெற்றில் வெளியிடப் படும் கட்டளைமூலம், சமவாயத்தை 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மீள ஒப்படைத்தற் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தவறுகள் தொடர் பில் மீள ஒப்படைப்புக்கு ஏற்பாடு செய்வதாக இலங்கை அரசாங்கத் தினால் அந்த நாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட ஒரு மீள ஒப்படைப்பு ஒழுங்கேற்பாடு எனக் கொள்ளலாம்.

அட்டவணையில் உள்ள தவறுகள் தொடர்பாக இலங்கை அர சாங்கத்துக்கும் குறித்த சில சார்க் நாடுகளுக் கும் இடையே யான ஒரு மீள ஒப்படைத்தற் றொழுங்கேற்பாடு என அமைச்சர் சமவாயத்தைக் கொள்ளலாம்.

6. (1) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளை மீள ஒப்படைப்பதற்காக, இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நாடொன்றன் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அர சாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, அமைச் சர், இலங்கை அரசாங்கத்தினது சார்பில், வேண்டுகோள் செய்யும் நாட் டினது அரசாங்கத்திற்கு, அத்தவறுக்காக, அவ்வாளை மீள ஒப்படைப் பதற்கு அல்லது அவருக்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கு இலங்கை அர சாங்கமானது எடுத்துள்ள அல்லது எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை களை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

எவ்வாட்களுக் காக மீள ஒப் படைப்புக் கோரிக்கை செய்யப்பட்ட தோ அவ்வாட் களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை கள் பற்றி வேண் டுகோள் விடுக் கும் நாட் டிற்கு அறிவிப் பதற்கு அமைச் சருக்குள்ள கடமை.

(2) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப் பட்டுள்ள தவறொன்றிற்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளை மீள ஒப்படைப்பதற்காக, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தற் சட்டத்தின்கீழ் கட் டளை எதுவும் செய்யப்படுதலாகாதென தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து, இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட் டுள்ள நாட்டினது அரசாங்கத்தினால், அச் சட்டத்தின் கீழ் அவரது மீள ஒப்படைப்புக்கான வேண்டுகோளைப் பின்பற்றி, அவ்விடயமானது, அத் தகைய ஆளானவர் எத்தவறுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளாரோ அத் தவறுக்காக வழக்குத் தொடர்வதற்கு அல்லது வேறு தோதான நட வடிக்கை எடுப்பதற்கு இயைபான அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## குற்றவியல் நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கான நியாயாதிக்கம்

7. இலங்கையில் புரியப்பட்டிருந்தால், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றாக அமைந்திருக்கக் கூடிய ஏதேனும் செயலை சமவாய நாடொன்றில் எவரேனும் ஆள் அவர் இலங்கைப் பிரசையாயினும்சரி அல்லாவிடினும்சரி, புரிந்தால் அத் தகைய ஆள் இலங்கையில் அச்செயலைப் புரிவதன் மூலம் ஆக்கப்பட்ட தவறுக்கு இலங்கையில் குற்றவாளியாதல் வேண்டும்.

நியாயாதிக்கம்.

இலங்கைக்கு வெளியே புரியப் பட்ட தவறு களுக்கான நியா யாதிக்கம்.

8. (1) சமவாய நாடொன்றின் நாட்டவரான ஆனால் இலங்கைப் பிரசையல்லாத ஆளொருவர், இலங்கைக்கும் அந்த சமவாய நாட்டிற்கும் வெளியில், அச் சமவாய நாட்டில் தவறொன்றிற்கு அவரைக் குற்றவாளியாக்கும் ஏதேனும் செயலை அத்துடன் அவர் இலங்கைப் பிரசையாகவிருந்தால் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கு அவரைக் குற்றவாளியாக்குகின்ற ஏதேனும் செயலை செய்தால், அவர் இலங்கையின் அத்தகைய ஒரு பிரசையாகவிருந்திருந்தால் அவரைக் குற்றவாளியாக்கியிருக்கக்கூடிய செயல் தொடர்பாக மேற்சொல்லப்பட்ட தவறுகளுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(2) இலங்கைப் பிரசை ஒருவர், இலங்கைக்கு வெளியே அல்லது சமவாய நாட்டிற்கு வெளியே, ஏதேனும் செயலைச் செய்து அச்செயல் இலங்கையில் புரியப்பட்டிருப்பின் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கு அவரைக் குற்றவாளியாக்கக்கூடியதாகவிருந்தால், அது, இலங்கையில் புரியப்பட்டிருந்தால் அவர் குற்றவாளியாக இருந்திருக்கக்கூடிய அச்செயல் தொடர்பில் மேற்சொல்லப்பட்ட தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

இப்பிரிவில் "சமவாய நாடு" என்பது இச்சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் நாடு என்று பொருள்படும்.

மேல் நீமன்றத் தின் நியாயா திக்கம்.

9. (1) ஏழாம், 8 ஆம் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தவறுகளை விளங்குவதற்கான நியாயாதிக்கம் இலங்கை மேல் நீதிமன்றத்திற்கு இத்தால் உரித்தாக்கப்படுகின்றது.

(2) ஓராம் உட்பிரிவினால் மேல் நீதிமன்றத்தில் உரித்தாக்கப்பட்டுள்ள நியாயாதிக்கமானது, கொழும்பில் அமரும் இலங்கை மேல் நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுவதாதல் வேண்டும்.

முதலாம் அட்டவணை (பிரிவுகள் 4. 5)

சமவாயத்தின் உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தவறுகளின் நிரல்

(அ) 1970, திசம்பர் 16 ஆந் தேதியன்று ஹெய்க்கில் கைச்சாத்திடப்பட்ட, வானூர்தியின் சட்டவிரோத கைப்பற்றலை ஒடுக்குவதற்கான சமவாயத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட தவறொன்று.

(ஆ) 1971, செப்ரெம்பர் 23 இல் மொன்றியலில் கைச்சாத்திடப்பட்ட சிவில் விமானப் போக்குவரத்தினது பாதுகாப்புக்கெதிரான சட்ட விரோதச் செயல்களை ஒடுக்குவதற்கான சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று.

(இ) 1973, திசெம்பர் 14 ஆந் தேதியன்று நியூயோர்க்கில் கைச்சாத்திடப்பட்ட காவற்றூது முகவர்கள் உட்பட, சர்வதேச ரீதியாகப் பாதுகாக்கப்பட்ட ஆட்களுக்கெதிரான குற்றங்களைத் தடுத்தல் பற்றிய, சமவாயத்தின் நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று.

(ஈ) எந்த சமவாயத்தில் சார்க் அங்கத்துவ நாடுகள் திறத்தவர்களாகவுள்ளனவோ அந்த ஏதேனும் சமவாயத்தினது அத்துடன் எந்த சமவாயம் வழக்குத் தொடர்வதற்கு அல்லது மீள ஒப்படைத்தல் வழங்குவதற்கு திறத்தவரைக் கட்டாயப்படுத்துகின்றதோ அந்த ஏதேனும் சமவாயத்தினது நோக்கெல்லைக்குள்ளான தவறொன்று.

(உ) கொலை, ஆட்கொலை, உடல் ஊறை விளைவிக்கும் தாக்குதல், ஆட்கடத்தல், பணயமாக எடுத்தல், அத்துடன் ஆதனத்திற்குப் பாரிய சேதம் அல்லது ஆட்களுக்குப் பாரிய உடல் ஊறு அல்லது இறப்புடன் தொடர்பு பட்ட வகைதொகையற்ற வன்முறையைத் தூண்டிவிடுவதற்கான வழிவகையாகப் பயன்படுத்தப்படுமிடத்து சுடுபடைக்கலன்கள், ஆயுதங்கள், வெடிப்பொருட்கள் அபாயகரமான பதார்த்தங்கள் தொடர்பிலான தவறுகள்.

(ஊ) உட்பந்தி (அ) முதல் (உ) வரையில் விபரிக்கப்பட்டுள்ள தவறொன்றைப் புரிவதற்கு எத்தனித்தல் அல்லது சதி செய்தல், அத்தகைய தவறைப் புரிவதற்கு உடந்தையாயிருத்தல் துணைபுரிதல், அல்லது ஆலோசனையளித்தல் அல்லது அவ்வாறு விபரிக்கப்பட்ட தவறுகளில் குற்றத்துணையாளியாகப் பங்குபற்றுதல்.

## இரண்டாவது அட்டவணை

(பிரிவு 6)

பிராந்தியக் கூட்டுறவுக்கான தெற்காசியக் கழகத்தின் அங்கத்துவ நாடுகள்

பங்களாதேஷ் மக்கள் குடியரசு,

பூட்டான் இராச்சியம்,

இந்தியக் குடியரசு,

மாலைதீவுக் குடியரசு,

நேபாள இராச்சியம்,

பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 177 ; (வெளிநாடு) ரூபா 236 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.